5.2.2019

அ.வ.எண்: 34/2016

பெயர்: முனிரத்தினம்

வா.சா:1

**குறுக்கு விசாரணை**

நான் 30 வருடங்களாக பெங்களூரில் குடியிருக்கிறேன். அதற்கு முன்பு ஆற்காடு குப்பத்தில் குடியிருந்தேன். நான் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆற்காடு குப்பத்திற்கு பக்கத்தில் தான் ஆந்திரா உள்ளது என்றால் சரிதான். வீடு ஆந்திரா எல்லையில் கொள்ளப்பள்ளி கிராமத்தில் உள்ளது. ஆற்காடு குப்பத்தில் இருந்து சுமார் 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். முன்பு மாடி வீடாக இருந்தது தற்போது இடிந்து விட்டது. தற்போது சிமெண்ட் சீட் போடப்பட்டுள்ளது. அந்த விட்டில் எனது அண்ணன் தம்பி குடியிருக்கிறார்கள். அளவு கிழக்கு மேற்கு 17 அடி வடக்கு தெற்கு 40 அடி. இது தவிர வேறு வீட்டு மனை கிடையாது. இந்த சொத்தை தாவா சொத்தில் சேர்க்கவில்லை. சொத்து ஆந்திராவில் இருப்பதால் சேர்க்கவில்லை. கொள்ளப்பள்ளி கிராமத்தில் 12 குழி நிலம் இருந்தது. அது என்னுடைய அம்மாவின் சொத்து. எனது தந்தை வாங்கி எனது அம்மா பெயரில் எழுதி கொடுத்த சொத்து. அந்த சொத்தை தாவா சொத்தில் சேர்க்கவில்லை. எனக்கு 1 தங்கை நீலா, 1 அண்ணன கிருஷ்ணய்யா, 2 தம்பி ராதாகிருஷ்ணா ,ஆனந்தா உள்ளார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் கொள்ளகுப்பத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். 5ம பிரதிவாதி பெங்களூரில் குடியிருக்கிறார். தாவாவில் 5 அய்டம் சொத்துக்ள உள்ளது. ஏ அட்டவணை சொத்து தாத்தா வெங்கடையா மந்தடி சம்பாதிய சொத்து. சர்வே எண் ஞாபகம் இல்லை. ஏ அட்டவணை சொத்து 1 ஏக்கர் 75 செண்ட், பி அட்டவணை சொத்து 36 செண்ட் எனது தந்தை சம்பாதித்த சொத்து, சி அட்டவணை சொத்து நான் எதுவும் குறிப்பிடவில்லை. பாகப்பிரிவினை பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். அது 1 ஏக்கர் 75 செண்ட்குரியது. தாவா சொத்து இதற்கு முன்பு நாங்கள் பாகப்பிரிவினை செய்யவில்லை. தவா சொத்தின் விஸ்தீரணம் சரியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை 25 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருந்த போது பாகப்பிரிவினை நடந்து என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**